# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (விளைவாந் தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, பெப்புருவரி மாதம் 11 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூப 9.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (விளைவாந் தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.- ஒ. 47/2003
4800

**இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியைப் பகிரங்கக் கம்பெனியொன்றாகப் பதிவுசெய்கின்றமையின் விளைவாந்தன்மையினதான ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டம் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து (இது இதனகத்துப் பின்னர் "குறித்துரைக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நீக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தேதியானது, அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின்கீழ் சபாநாயகரினால் பாராளுமன்றச் சட்டமொன்றாக சட்டமூலம் அத்தாட்சிப்படுத்தப்படும் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியாதல் வேண்டும்.

1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்கஞ் செய்தல்.

**3.** (1) அமைச்சரானவர், இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் எந்நேரத்திலும், பணச் சபையினால் உரியமுறையில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புப் புறவிதியையும் அமைப்பக விதிகளையும், பணிப்பொன்றில் அமைச்சரினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய பெயரில் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியைப் பகிரங்கக் கம்பெனியொன்றாகப் பதிவு செய்யும்படி கம்பெனிகள் பதிவாளரைத் தேவைப்படுத்தும் அத்தகைய பணிப்பொன்றுடன் சேர்த்து, அத்தகைய பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியைப் பகிரங்கக் கம்பெனியாகப் பதிவுசெய்தல்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்திரெண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்விதமிருப்பினும், கம்பெனிகள் பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்பைப் பெற்றதன்மேல் -

(அ) ஓராம் உட்பிரிவின் கீழான பணிப்பில் குறித்துரைக் கப்படுகின்றவாறான அத்தகைய பெயரில், மேற் கூறப்பட்ட சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டிணைப்புச் சான்றதழொன்றை வழங்குதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தொழிற்படு முயற்சியொன்றாக இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியின் தொழிலைக் கையேற்றுக் கொண்டுநடாத்துவதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட பெயரில் குறித்துரைக் கப்பட்ட தேதியிலிருந்து பகிரங்கக் கம்பெனியொன்று (இதனகத்துப்பின்னர் “கம்பெனி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்படுகின்றதென வெளிப் படுத்தி கசெற்றில் கட்டளையொன்றை வெளியிடுதல் வேண்டும்.

இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியின் தொழில், கம்பெனிக்கு உரித்தாக்கப்படுதல்.

**4.** குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியின் தொழில், 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனிக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

**5.** இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாக, 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டம் நீக்கப்படுவதன்மேல்,—

(அ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன் றுள்ளவாறான இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி யின் பங்கு மூலதனம், குறித்துரைக்கப்பட்ட தேதியி லுள்ளவாறான கம்பெனியின் பங்குமூலதனமாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்போந்த நாளன்று இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியின் எல்லாப் பங்குதாரர்களும், குறித்துரைக்கப்பட்ட தேதி யிலுள்ள வாறான கம்பெனியின் பங்குதாரர்களாகக் கருதப்படு தல் வேண்டுமென்பதுடன், கம்பெனியில் அத்தகைய பங்குதாரர்களினால் வைத்திருக்கப்பட்ட பங்குகள், குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வங்கியில் அவர்களினால் வைத் திருக்கப்பட்டவற்றை எண்ணிக்கையில் ஒத்திருக்கின்றனவாகவிருத்தலும் வேண்டும் ; அத்துடன் வங்கியினால் வழங்கப்பட்ட எல்லாப் பங்குச் சான்றிதழ் களும், அத்தகைய பங்குச் சான்றிதழ்கள் கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்கள் என்றாற்போன்று வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் ;

(இ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி யின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் குறித் துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியின் ஊழியர் களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்த கைய அலுவலர்களும், சேவையாளர்களும் குறித்துரைக் கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வங்கியின் கீழ் அவர்களினால் துய்க்கப்பட்ட நியதி நிபந்தனை களைவிடக் குறைந்த அனுகூலமற்ற நியதிநிபந்தனை களின் மீது தொடர்ந்தும் பதவிவகித்தலும் வேண்டும் ;

(ஈ) இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியினால் குறித் துரைக்கப் பட்ட தேதிக்கு நேர்முந்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளனவாக இருப்பவை யும், அவற்றுக்கு வங்கி ஒரு திறத்தவராக உள்ளவை யும், அல்லது வங்கியின் பெயரில் இருப்பவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், உத்தரவாதங்களும், அற்றோணித் தத்துவங் களும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புகளும் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாதனங் களும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து விடயத்துக் கேற்ப, கம்பெனியினால் செய்துகொள்ளப்பட்ட அல் லது கம்பெனியின் பெயரில் அளிக்கப்பட்ட ஒப்பந்தங் களாகவும், உறுதிகளாகவும், முறிகளாகவும், உடன் படிக்கைகளாகவும், உத்தரவாதங்களாகவும், அற்றோ ணித் தத்துவங்களாகவும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப் புகளாகவும் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாதனங்களாகவும் கருதப்படுதலும் வேண்டும் ;

(உ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வங்கித் தொழிற் சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது வேறுவகையாக இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி யினால் பேணப்படும் எல்லா ஒதுக்குகளும், குறித்து ரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியின் ஒதுக்கு களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஊ) இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் குறித் துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ள எத்தன்மையினவுமான எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும், குறித்துரைக் கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியினால் அல்லது கம்பெனிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளா கவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம் ;

(எ) வங்கியினால் தாபிக்கப்பட்டவையும், குறித்துரைக்கப் பட்ட தேதிக்கு நேர்முந்போந்த நாளன்று உள்ளவையு மான இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சகாய நிதியமும், இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி ஓய்வூதிய நிதியமும், இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி ஊழியர்கள் பங்குவிருப்புத் தெரிவுத் திட்டமும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியினால் தாபிக்கப்பட்ட முறையே சகாய நிதியமாக, ஓய்வூதிய நிதியமாக, மற்றும் பங்கு விருப்பத் தெரிவுத் திட்டமா கக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஏ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ள இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியின் எல்லா வரிவரவுகளும், மீளளிப்புகளும் நட்டங்களும் சலுகை களும் நிவாரணங்களும், நன்மைகளும், பொறுப்புக் களும், குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து கம்பெனி யின் வரிவரவுகள், மீளளிப்புகள், நட்டங்கள், சலுகை கள், நிவாரணங்கள், நன்மைகள், பொறுப்புக்கள் என் பனவாக இருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஐ) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியின் சார்பாக அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தினால் பதிவீடு செய்யப்படும் எல்லாத் தீர்ப்புகளும், தீர்வை களும் அல்லது கட்டளைகளும், குறித்துரைக்கப்பட்ட

தேதியிலிருந்து கம்பெனியின் சார்பாக அல்லது அதற்கெதிராகப் பதிவீடு செய்யப்பட்ட தீர்ப்பபொன்றாக, தீர்வையொன்றாக அல்லது கட்டளையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வரையறுக்கப்பட்ட ஏற்புடைமை.*

**6.** இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டம் நீக்கம் செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம், (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், குறித்துரைக்கப்பட்ட தேதி யிலிருந்தும் அதன் பின்னரும், அப்பிரிவின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கத்தினால் அவ்வாறு உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் முழுமையாக மீளச்செலுத்தப்படும்வரையும் அத்துடன் அதன் பின்னரல்லாதும், அத்தகைய பிரிவானது ஒருபோதும் நீக்கஞ்செய்யப்படவில்லை என்றாற்போன்று தொடர்ந்து நடைமுறையிலிருத்தலும் முழு சட்ட வலுவுடையதாகவும் அத்துடன் பயனுடையதாதலும் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் மேற்கூறப்பட்டவாறு உத்தரவாதமளிக்கப்பட்டதும் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு உடன் முந்திய நாளன்று உளதாயிருப்பதுமான கடன் ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, அவ்வாறு உத்தரவாதமளிக் கப்பட்ட கடன்கள் கம்பனியால் திரட்டப்பட்ட கடன்களைப்போன்று தொடர்ந்து உளதாயிருத்தல் வேண்டும்.

*எழுத்திலான சட்டங்கள் முதலியவற்றுக்கான விளைவாந்தன்மையினவான திருத்தங்கள்.*

**7.** குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, ஏதேனும் சட்டத்தில், ஒழுங்குவிதியில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், சாதனத்தில், பதிவேட்டில், பங்குச்சான்றிதழில், ஆவணத்தில், உறுதியில், முறியில், உடன்படிக்கையில், உத்தரவாதத்தில், அற்றோணித்தத்துவத்தில், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்பில் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாதனங்களில் இலங்கைத் தேசிய அபிவித்தி வங்கிக்கான ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்குத் தோதானதாக அல் லது அவசியமானதாக இருக்கும்போதெல்லாம் கம்பெனிக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட கம்பெனியின் பெயர், அவ்வாறு செய்வதற்கு அவசியமானதாக அல்லது தோதானதாக உள்ள போதெல்லாம், வங்கியின் பெயருக்குப் பதிலாக இடப்படுதலும் வேண்டும்.

பணச்சபை விதிகளை ஆக்குதல்.

**8.** (1) உரிமம்பெற்ற விசேட வங்கியொன்றென்றமுறையில் கம்பெனியானது எத்தேவைப்பாடுகளுக்கு அமைந்ததாக இருக்க வில்லையோ, உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று தொடர்பாக ஏற்புடையனவாகவுள்ள 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தினதும் (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினதும் அத்தேவைப்பாடுகளுக்கு (இதனகத்துப் பின்னர் “இணங்கியொழுகுகைக் காலப்பகுதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் இசைந்தொழு வதற்குக் கம்பெனிக்கு உதவுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான விதிகளைப் பணச்சபையானது ஆக்கலாம் :

ஆயின், இணங்கியொழுகுகைக் காலப்பகுதியின்போது, மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைக் கொண்டுள்ள வங்கித் தொழிற் சட்டத்தினதும் பணச் சட்டத்தினதும் ஏற்பாடுகள், விதிகளைப் பயனுறுத்துதற்கு அவசியமான அளவுக்குக் கம்பெனிக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) பணச்சபையினால் ஆக்கப்படும் ஒவ்வொருவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**9.** (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, வங்கியின் தொழிலைக் கம்பெனிக்கு உரித்தாக்குவதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலுதம் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு ஒழுங்குவிதிகளுக்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**11**. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"கம்பெனி" என்பது, 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) பந்தியின்கீழ் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனி என்று பொருளாகும் ;

"தொழில்" என்பது -

(அ) குறித்துரைக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு, உரிமம் பெற்ற விசேட வங்கியென்றமுறையில் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியினால் கொண்டு நடாத்தப்படும் தொழிலையும் ;

(ஆ) (காசு மீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்கள் உட்பட) குறித்துரைக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியின் அசைவுள்ள, அசைவற்ற எல்லா ஆதனத்தையும்;

(இ) குறித்துரைக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியின் வைப்புக்களும் எதிர்பாராப் பொறுப்புக்களும் உட்பட்ட எல்லாப் பொறுப்புக்களையும் ;

(ஈ) சொல்லப்பட்ட தொழிலில் அல்லது அதிலிருந்து எழுகின்ற எல்லா உரிமைகளையும், தத்துவங்களையும், சிறப்பு உரிமைகளையும், அதிகாரங்களையும் கடப்பாடுகளையும், கடமைகளையும், அக்கறைகளையும், வங்கித்தொழிற் சட்டத்தின் 76அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பணச்சபையினால் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமம் உட்பட, குறித்துரைக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு, அத்தகைய ஆதனத்தையும் அத்தகைய பொறுப்புக்களையும் ;

(உ) குறித்துரைக்கப்பட்ட தேதியில் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி அல்லது அவ்வங்கியின் ஏதேனும் ஆதனம் தொடர்பான அல்லது அதனோடிணைந்த எல்லாப் புத்தகங்களையும், கணக்குகளையும் ஆவணங்களையும்

உள்ளடக்கும் ;

"வங்கித்தொழிற் சட்டம்" என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டம் என்று பொருளாகும் ;

"இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி" என்பது, 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்